## *10*

### *திறவுகோல் வசனம்: 1 கொரிந்தியர் 5:7, 8*

# இதில் உண்பதற்கு உரிமைகொண்டுள்ளவர் யார்?

*லுக்கா சுவிசேஷத்தின்படி, சீஷர்கள் அப்பம் பிட்கும்படி கூடிவந்தனர் (நடபடிகள் 20:7). சீஷர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் (நடபடிகள் 11:26). மற்றவர்கள் இந்த அப்பம் பிட்கவும் திராட்ச இரசத்தைப் பானம்பண்ணவும் உரிமை கொண்டுள்ளனரா?*

*கர்த்தருடைய சபையின் தொடக்ககால வரலாற்றில், ஞானஸ்நானம் பெற்று விசுவாசம் நிறைந்த வாழ்வை வாழ்ந்தவர்கள் மாத்திரமே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர் என்று* Didache *என்ற புத்தகத்தில் உள்ள கூற்றுகள் சுட்டிக்காண்பிக்கின்றன.*

> *ஆனால் உங்களில் கர்த்தருடைய நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்கள் தவிர வேறு எவரும் இந்தப் பந்தியில் உண்டு புசிக்க அனுமதிக்க வேண்டாம். இதைக்குறித்துக் கர்த்தரும், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடுக்க வேண்டாம்" என்று கூறினார்.*[1]

> *மற்றும் கர்த்தருடைய சொந்த நாளில் நீங்கள் ஒன்றுகூடி அப்பத்தைப் பிட்டு நன்றி செலுத்துங்கள், உங்கள் பலி தூய்மையானதாக இருக்கும் பொருட்டு, முதலில் உங்கள் மீறுதல்களை அறிக்கையிடுங்கள். உங்கள் பலி தீட்டுப்படாதபடிக்கு, எந்த மனிதரும் தமது சகோதரருடன் வழக்கைக் கொண்டிருந்து, அவர்கள் ஒப்புரவு ஆகாதவரையில் உங்கள் சபைகூடுகையில் இணைய வேண்டாம்; ஏனெனில் இந்த பலி இவ்வாறுதான் கர்த்தரால் பேசப்பட்டுள்ளது.*[2]

*மார்க்கத்திற்கு எதிரானவர்களுடன் இராப்போஜனத்தைப் பகிர்ந்து கொள்ளும் கிறிஸ்தவர்கள் தவறு செய்கின்றனர் என்று தெர்த்துல்லியன் எழுதினார்:*

> *எல்லா வழிகளையும் அவர்கள் ஒன்றுபோலவே கொண்டுள்ளனர், அவர்கள் ஒன்றுபோலவே கேள்விப்படுகின்றனர், அவர்கள் ஒன்றுபோலவே ஜெபிக்கின்றனர் - அவர்களில் தேவனை விசுவாசியாதவர்கள் இருந்தாலும் அவர்களும் இதைக் கொண்டுள்ளனர். "பரிசுத்தமானதை அவர்கள் நாய்களுக்குப் போடுவார்கள்" மேலும் அவர்கள் தங்களின் முத்துக்கள் உண்மையானவைகளாக இல்லை (என்பது நிச்சயமானாலும்) "அவற்றை அவர்கள் பன்றிகளுக்கு முன்பாக எறிவார்கள்."*[3]

இந்தக் கூற்றில் அவர், புறதெய்வ வணக்கத்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தின் ''முத்துக்கள்'' தரப்படாது இருந்தனர் என்று உறுதிப்படுத்தினார்.

மார்க்கக் குழு ஒன்று, 144,000 பேர் மாத்திரமே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க உரிமை கொண்டுள்ளனர் என்று போதிக்கிறது:

> இன்றைய நாட்களில் அப்பத்திலும் திராட்ச இரசத்திலும் பங்கேற்கும் யாவரும், "இராஜ்யத்திற்கான ஒரு உடன்படிக்கை"யினுள் கிறிஸ்து கொண்டுவருகிற நபர்களாகவும் இருக்க வேண்டும்.
>
> பங்கேற்பவர்கள் எத்ததனைபேர்? "சிறு மந்தை" தான் தங்கள் பலனாகப் பரலோக இராஜ்யத்தைப் பெறும் என்று இயேசு கூறினார் (லூக்கா 12:32). 144,000 என்பது முழு எண்ணிக்கையாக இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 14:1-3). அந்தக் குழுவானது 33 C.E யில் தேர்ந்தெடுக்கப்படத் தொடங்கிற்று. இப்போது அறிவுரைக்கேற்ற வகையில் பார்த்தால் ஒரு சிறு எண்ணிக்கையிலானவர்களே அதில் இருப்பார்கள்.[4]

தேவனுடைய கிருபைகளுக்குள் இல்லாதவர்களிடமிருந்து ஐக்கிய விருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என்று சில சபைகள் (பெயர்க்குழுக் கூட்டங்கள்) போதிக்கின்றன. (இவ்விடத்தில் நாமகரணக் கூட்டங்களை சபைகள் என்று குறிப்பிடுவது சரியல்ல என்பது எனது கருத்தாகும். எனவே பெயர்க்குழுக் கூட்டங்கள் என்ற மாற்றுச் சொற்றொடரை அடைப்புக்குறிக்குள் கொடுத்துள்ளேன்: மொழிபெயர்ப்பாளர்) அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்டால், அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவருகின்றனர் என்று அவர்கள் நம்புக்கின்றனர். மார்ட்டின் லுத்தர் இதைத்தான் போதித்தார்: "துன்மார்க்கர் இராப்போஜனத்தை உண்பதால் தங்களுக்குத் தாங்களே அழிவை ஏற்படுத்திக்கொள்ளும் அளவுக்கு (இராப்போஜனத்தில்) கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பிரசன்னம் உள்ளது ... குறிக்கோள் அளவில் மிகவும் உண்மையானதாக உள்ளது."[5]

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கத் தகுதியானவர் யார் என்ற கேள்விக்குப் பதில் அளிக்கப் பல வேதவசனங்கள் உதவலாம்: நடபடிகள் 2:41, 42; 20:7; 1 கொரிந்தியர் 5:1-11 மற்றும் 10:16, 17. இவை ஒவ்வொன்றையும் நாம் கவனமாகப் பரிசீலனை செய்து பார்ப்போமாக.

## ஞானஸ்நானம் பெற்றவர்கள் (நடபடிகள் 2:41, 42)

> அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (நடபடிகள் 2:41, 42).

இந்த வேதவசனப் பகுதியின்படி, ஞானஸ்நானம் பெற்றவர்களே அப்பம் பிட்குதலில் உறுதியாய்த் தரித்திருந்தனர். இந்தக் கிறிஸ்தவர்கள், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் போதனையைக் கேட்டவர்களில்

இருந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு கர்த்தருடைய சபைக்குள் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களாக இருந்தனர். இவர்கள் அப்பம் பிட்குதலுடன் கூடுதலாக, அப்பேபோஸ்தலர்களின் உபதேசத்தைக் கற்றுக்கொண்டு அதன்படி வாழ்வதற்கும், கிறிஸ்தவ ஐக்கியத்திற்கும் மற்றும் ஜெபத்திற்கும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர்.

## கிறிஸ்தவர்கள் (நடபடிகள் 20:7)

> *வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடன் சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் (நடபடிகள் 20:7).*

சீஷர்கள், அதாவது கிறிஸ்தவர்கள் (காண்க நடபடிகள் 11:26) அப்பம் பிட்கக் கூடிவந்திருந்தனர் என்று லூக்கா எழுதினார். அப்போஸ்தலரின் உபதேசத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகியிருந்தவர்கள் மாத்திரமே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்றனர் என்று வேதாகம உதாரணம் மீண்டும் காண்பிக்கிறது.

## கிறிஸ்தவ வாழ்வை வாழ்பவர்கள் (1 கொரிந்தியர் 5:1-11)

பாவம் நிறைந்த வாழ்வை மனப்பூர்வமாக வாழும் கிறிஸ்தவர்கள் இராப்போஜனத்தை உண்ணும் உரிமை கொண்டிருப்பதில்லை. தனது தகப்பனின் மனைவியுடன் ஒழுக்கவீனத்தில் ஈடுபட்டு இருந்த ஒரு மனிதன் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 5:1-8). இது அவனுடன் ஆவிக்குரிய மட்டத்தில் இணைந்திருத்தலோ அல்லது அவனு டன் உண்ணவும் கூடவோ கிறிஸ்தவர்கள் மறுத்துவிட வேண்டும் என்பதை உள்ளடக்கிற்று (1 கொரிந்தியர் 5:11). இது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதை உள்ளடக்கியிருக்கும் என்பது நிச்சயம்.

இவ்வசனப் பகுதியைக் குறித்து வெர்னெர் எலர்ட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> *இங்கு குறிப்பானது இதே நிருபத்தில் கலந்துரையாடப்பட்டுள்ள கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றியதாக அதிகம் இருக்கலாம். இது குறிப்பாக அர்த்தப்படுத்தப்படவில்லை என்றாலும், இது நிச்சயமாக ஒருவிதிவிலக்காக இராது.*[6]

பிற்பாடு அவர் பின்வருமாறு எழுதினார்:

> *கொரிந்தியக்கு எழுதிய நிருபத்தில் பவுல் கூறிய இந்த விஷயத்தை, அம்மனிதருக்குக் கொரிந்து சபையில் மாத்திரமே ஐக்கியம் மறுக்கப்படவேண்டும், அம்மனிதர் அத்தேனே பட்டணத்தின் சபைக்கு வந்தால் அதைப்பற்றிக் கவனம் செலுத்த அவசியமில்லை என்று எடுத்துக் கொள்ளுதல் சாத்தியமாக இருப்பதில்லை. ஒரே ஆவியில் கொரிந்தியர்கள் கூடிவந்திருக்கையில் பவுல் அம்மனிதரை சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தார்*

> *(1 கொரிந்தியர் 5:4 முதல்). தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு சாத்தானுடைய இராஜ்யம் என்பது கிறிஸ்துவின் இராஜ்யத்தைக் காட்டிலும் அதிகம் உள்ளூர வட்டணித்திருக்கவில்லை.*[7]

*ஒழுக்கவீனரான மனிதரைக் குறித்துப் பவுல் குறிப்பான அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார்:*

> *ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் (1 கொரிந்தியர் 5:7, 8).*

*பாவம் நிறைந்த இந்த மனிதர் "புளித்த மாவாக" இருந்தார். பாவம் நிறைந்த ஒருவர் நபர் என்ற வகையில் அந்த மனிதர் கிறிஸ்தவ சமூகம் முழுவதையும் மோசமாக்கக் கூடும் என்பதால், விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்கள் அம்மனிதருடன் இணைவு கொண்டிருக்கக் கூடாதிருந்தது. ஒழுக்கவீனரான மனிதர் என்ற பழைய புளித்தமாவைக் கழித்துப் போடுவதன் மூலம், கிறிஸ்தவ சமூகமானது புளிப்பில்லாததாக நிலைத்திருக்கும். இவ்வாறாக அவர்கள், துன்மார்க்கமான நபரினால் பாதிக்கப்படாமல் கர்த்தருடைய இராப்போஜன விருந்தை உண்ண முடிந்தது.*

*கோர்டன் ஃபீ அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:*

> *இருப்பினும் விருந்தைக் கொண்டாடுதலுக்கான இந்தக் கூடுதல் குறிப்பு (1 கொரிந்தியர் 5:8) கர்த்தருடைய பந்தியில் அவர்களின் அமைவிற்கான மறைமுகக் கருத்தையும் உள்ளடக்குகிறது. சந்தர்ப்பப் பொருளில் ஒரு சகோதரரை விலக்குதல், அவருடன் அவர்கள் சேர்ந்து உண்ணாது கூட இருத்தல், அதிலும் குறிப்பாக 11ம் வசனத்தில் உள்ள கட்டளையின் வெளிச்சத்தில் அதைச் செய்தல் என்பது பந்திமேஜைக்கு மறைமுகமான கருத்தாக இருந்தபோதிலும், அதை நிச்சயமாகக் கூறுவதற்கு வழியில்லை.*[8]

## *ஒரே சரீரத்தின் உறுப்புகள் (1 கொரிந்தியர் 10:16, 17)*

> *நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் (1 கொரிந்தியர் 10:16, 17).*

*பவுல், "ஒரே சரீரமான" (ரோமர் 12:5; 1 கொரிந்தியர் 12:12, 13, 20; எபேசியர் 4:4) சபையானது (எபேசியர் 1:22, 23; கொலோசெயர் 1:18, 24), கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றுடன்*

*தொடர்பு கொண்டுள்ளது என்று எழுதினார். சபையாகிய அந்த ஒரே சரீரத்தில் உள்ளவர்கள் இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் ஆவிக்குரிய வகையில் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த சரீரத்தின் உறுப்புகளே/உறுப்பினர்களே கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்பவர்களாக உள்ளனர் என்று பவுல் சுட்டிக்காண்பித்தார். இந்த ஒரே சரீரத்திற்குப் புறம்பே உள்ளவர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியத்தில் இருப்பதில்லை, எனவே அவர்கள் அவரது சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றுடனான தொடர்பில் பங்கேற்க உரிமை கொண்டிருப்பதில்லை.*

*கிறிஸ்துவுக்குள் இருக்கும் சரீரமே (சபையே) ஒரே சரீரமாக உள்ளது (ரோமர் 12:5), இது விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றைக் கொண்டு பிரவேசிக்கிறது (ரோமர் 6:3; கலாத்தியர் 3:26, 27). எனவே இராப்போஜனம் என்பது விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்ட வேண்டியதாக உள்ளது.*

*எந்த ஒரு நபரும், இன்னொரு நபர் நீதியின் ஊழியக்காரராவதற்கு இருதயத்தில் கீழ்ப்படிந்து இருக்கிறாரா என்பதை நிச்சயமாக அறிய இயலாது (ரோமர் 6:17, 18). மனித இருதயங்களை தேவன் மாத்திரமே அறிகிறார். இது உண்மையாக இருப்பதால், ஒவ்வொரு நபரும் கரத்தருடைய இராப்போஜனத்தில் தாம் பங்கேற்பதன் முன்னுரிமையைத் தமக்காகத் தாமே தீர்மானிக்க வேண்டும். ஒரு நபர் இதை உண்பதற்கு உரிமை கொண்டிருப்பதில்லை என்ற உண்மையானது, மற்றவர்கள் அவருக்கு இராப்போஜனத்தைக் கொடுக்காது வைத்துக்கொள்ளும் உரிமை கொண்டுள்ளனர் என்று அர்த்தப்படுவதில்லை. ஒவ்வொரு நபரும் இந்த அடிப்படையில் இயேசுவின் நினைவுகூரும் விருந்தில் பங்கேற்கத் தம்மைத்தாமே சோதித்தறிய வேண்டும் (1 கொரிந்தியர் 11:28).*

*சபைக்குழுமம் தனது ஐக்கியத்தில் இருந்து விலக்கி வைத்துள்ள கிறிஸ்தவர் ஒருவர் இந்தக் கொள்கைக்கு விதிவிலக்காக உள்ளார். அப்படிப்பட்ட நபருடன் கிறிஸ்தவர்கள் உண்ணக்கூடாது (1 கொரிந்தியர் 5:7, 11).*

*கர்த்தருடைய பந்தியை நடத்துபவர்கள், கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபையின் உறுப்பினர்கள் மாத்திரமே, சரீரமாகிய சபையில் ஞானஸ்நானம் பெற்றுள்ள காரணத்தினால் (1 கொரிந்தியர் 12:13), இராப்போஜனத்தில் பங்கேற்கும் உரிமைகொண்டுள்ளனர் என்பதை நன்கு விளக்கப்படுத்த வேண்டும் (1 கொரிந்தியர் 10:16, 17).*

## தொகுப்புரை

*சில சபைகள் "மூடிய திருவிருந்து" - சபை உறுப்பினர்த்துவப் பணிப்பொறுப்பில் உள்ளவர்கள் மற்றும் நல்ல நிலைப்பாட்டில் உள்ளவர்கள் மாத்திரம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க அனுமதிக்கும் நடைமுறை - என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர். சிலர் இராப்போஜனத்தை உள்ளூர் சபைக்குழுமத்தின் உறுப்பினர்களுக்கு மாத்திரம் என்று வரையறைப்படுத்துகின்றனர்.*

*மற்றவர்கள் "திறந்த திருவிருந்து" என்ற நடைமுறையைப் போதித்து நடைமுறைப்படுத்துகின்றனர், இது ஆராதனைக்கு வந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் திருவிருந்தைக் கிடைக்கப் பண்ணுவதாக உள்ளது. இது நடைமுறைப்படுத்தப்படும்போது, ஒவ்வொரு நபரும், தாம் கர்த்தருடைய*

இராப்போஜனத்தில் பங்கேங்பதா இல்லையா என்பதே அவரே தீர்மானிக்க வேண்டியதாக உள்ளது. இந்தக் குழுவில், கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்கள் மாத்திரமே இதில் உண்பதற்கு உரிமை கொண்டுள்ளனர் என்பதைத் தாங்கள் அறிவுறுத்த வேண்டும் என்று நம்புகிறவர்கள் உள்ளனர். பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றிராத வயது வந்தவர்களும் இராப்போஜனத்தில் பங்கேற்கக் கூடாது.

கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய அவரது சபையில் விசுவாசம் நிறைந்த தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்க உரிமை கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் பாவமன்னிப்பிற்காகக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். ஞானஸ்நானம் பெற்றிராத மக்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க உரிமை கொண்டிருப்பதில்லை. அவர்கள் இதில் உண்ணும்படி ஊக்குவிக்கப்படக் கூடாது, ஆனால் இதில் பங்கேற்க உரிமை கொண்டிருப்பதற்கு அவர்கள் என் செய்வது அவசியம் என்பது பற்றி அவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். சபைக்குழுமத்தினால் ஐக்கியத்தில் இருந்து விலக்கப்பட்டுள்ளவர்களைத் தவிர, இதில் உண்பதற்கு விரும்புகிற எவரிடமிருந்தும், இதைத் தடைசெய்யும் அதிகாரம் நமக்குத் தரப்பட்டிருப்பதில்லை.

குறிப்புகள்

[1]*Didache* 9.5. [2]Ibid., 14.1-3. [3]Tertullian *On Prescription Against Heretics* 41. [4]*Reasoning from the Scriptures* (Brooklyn, N.Y.: Watchtower Bible Tract and Tract Society of New York, 1989), 267-68. [5]Ronald Stewart Wallace, "Lord's Supper," *The International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:168. [6]Werner Elert, *Eucharist and Church Fellowship in the First Four Centuries,* trans. N. E. Nagel (St. Louis: Concordia Publishing House, 1966), 84. [7]Ibid., 126. [8]Gordon D. Fee, *The First Epistle to the Corinthians,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 218.

## எபிரெயர் 13:10ல் பலிபீடத்தில் புசிக்க "உரிமை இல்லாதநிலை"

எபிரெயர் 13:10ம் வசனம், "நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனைசெய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை" என்று அறிவிக்கிறது - ஆனால் பலிபீடம் என்பது என்ன? அது இயேசுவா, அவரது பலியா அல்லது கர்த்தருடைய இராப்போஜனமா?

எபிரெயர் 13:10ம் வசனம் ''திருப்பலி''யுடன் இணைவுபடுத்தப் பட்டிருக்கையில், பலிபீடம் என்பது ''கிறிஸ்து பலியாக்கப்பட்ட சிலுவையாகவோ அல்லது தேவனுக்கு ஜெபத்தின் பலிகளை நாம் ஏறெடுக்கும் ஊடகமாக உள்ள கிறிஸ்துவாகவோ'' இருக்கலாம் என்று சமீபத்திய கல்வியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.[1]

மோசேயின் பிரமாணத்தின்கீழ், ஆசாரியர்கள் மாத்திரம் தங்கள் குடும்பம் உறுப்பினர்கள் மற்றும் அடிமைகள்ஆகியோருடன் பலிபீடத்தில் வைக்கப்பட்ட பலிகளை உண்ணும் உரிமை கொண்டிருந்தனர் (லேவியராகமம்

*7:29-36; 22:10-16).* மற்றவர்கள் பலிகளை உண்ண அனுமதிக்கப்பட வில்லை (மற்றும் அவர்கள் தகுதியாகவும் இல்லை). யூதத்துவ ஆசாரியர்களாக செயல் துடிப்புடன் ஊழியம் செய்துகொண்டிருந்தவர்கள், கிறிஸ்தவர்கள் உண்ணலாம் என்றிருந்த “பலிபீடத்தில்” உண்ண இயலாதிருந்தது. கிறிஸ்தவர்கள் - புதிய ஏற்பாட்டின் ஆசாரியர்கள் (1 பேதுரு 2:9) - கிறிஸ்துவின் பலியில் உண்ணவும், அவரது இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்ட ஆசீர்வாதங்களில் இருந்து பயன்பெறவும் உரிமை கொண்டவர்களாக உள்ளனர். ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை அணிந்துகொண்ட யாவரும் கிறிஸ்துவுக்கும் அவரது ஆசீர்வாதங்களுக்கும் பங்காளிகள் ஆகின்றனர் (எபேசியர் 3:6; எபிரெயர் 3:14). கிறிஸ்துவை மறுக்கிறவர்கள் இரட்சிப்பில் அவரது ஆசீர்வாதம் மற்றும் அவரது இராப்போஜனம் ஆகியவற்றைத் தங்களுக்குத் தாங்களே மறுத்துக் கொள்கின்றனர்.

சிலுவையினால் இயேசுவினிடம் வர விரும்பும் எந்த நபரும் அவ்வாறு செய்ய உரிமை கொண்டுள்ளார். தாகமாக இருக்கும் எவரும் ஜீவ ஊற்றினிடம் வர உரிமை கொண்டுள்ளார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:6; 22:17). விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் வருகிற ஒருவர் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களில் பங்கேற்பவராகிறார். இயேசு, “பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை” என்று வாக்குறுதி அளித்தார் (யோவான் 6:37).

---

குறிப்பு

[1]Paul Ellingworth and Eugene Albert Nida, *A Translator's Handbook on the Letter to the Hebrews* (New York: United Bible Societies, 1983), 327. F. F. ப்ரூஸ் அவர்கள், “இவ்வசனப் பகுதிக்கும் [கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும்] இடையில் உள்ள தொடர்பு என்ன?” என்று கேள்வி கேட்டு, பின்பு தமது பதிலைக் கொடுத்தார்: “நேரடி தொடர்பு எதுவும் இருப்பதில்லை” (F. F. Bruce, *The Epistle to the Hebrews* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964], 401).